# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

### பகுதி A

**வினா இல. 01**

இது 25 புள்ளிகளுக்கான ஒரு கட்டாய வினாவாகும். வினாக்கள் முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இப்பகுதிக்கு முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

விடைகளை மதிப்பீடு செய்யும்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**1.1** வினாவானது கிரயக் கணக்கீடு தொடர்பான சரியான கூற்றைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.2** இங்கு LKAS 10 தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.3** இங்கு தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி குறித்த மாதமொன்றின் விற்பனைப் பெறுமானத்தைக் கணிப்பிடுவது பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் ஒரு சில பரீட்சார்த்திகளால் மாத்திரம் விடையளிக்க இயலவில்லை.

**1.4** இவ்வினாவில், தரப்பட்ட தரவுகளைக் கவனத்தில் கொண்டு 5 ஆம் ஆண்டின் இறுதியில் மோட்டார் வாகனம் ஒன்றின் முன்கொணரற் பெறுமதியை கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் 2021 மார்ச் 31 இலான முன்கொணரற் பெறுமதியைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட தரவுகளின் முன்கொணரற் பெறுமதியைக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

**1.5** இந்த வினா, தரப்பட்ட தரவுகளையும் சூத்திரத்தையும் பயன்படுத்தி சிக்கனக் கட்டளைக் கணியத்தை (EOQ) கணிப்பிடுவதைப் பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகள் EOQ இனைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். சிலர் கணிப்பிட்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகளின் கணித அறிவு மிக மோசமான மட்டத்தில் காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**1.6** இலங்கையில் பங்குடமை வியாபாரம் ஒன்றிற்குப் பொருத்தமான இரண்டு (02) சட்டங்களை/ ஒழுங்குவிதிகளை பட்டியலிடுமாறு கோரப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பங்குடமை வியாபாரம் ஒன்றிற்குப் பொருத்தமான இரண்டு (02) சட்டங்களை/ ஒழுங்குவிதிகளை பட்டியலிடத் தவறியிருந்தனர். பெருமளவான பரீட்சார்த்திகள் பங்குடமை உடன்படிக்கை தொடர்பான தகவல்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.7** இங்கு ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமை ஒன்றின் இரண்டு (02) அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்கத் தவறியிருந்ததுடன் ஒரு சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே விடையளிக்கக்கூடியதாக இருந்தது.

**1.8** இங்கு, வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் பங்குதாரர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கையையும் பணிப்பாளர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையையும் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் பங்குதாரர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கையைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலானவர்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் பணிப்பாளர்களது ஆகக்கூடிய எண்ணிக்கையைக் குறிப்பிடத் தவறியிருந்தனர்.

**1.9** தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ஊழியர் ஒருவரின் மொத்தச் சம்பாத்தியத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்தச் சம்பாத்தியத்திற்குப் பதிலாக ஊக்கத்தொகையைக் கணிப்பிட்டிருந்தனர்.

**1.10** தரப்பட்ட தரவுகளைக் கொண்டு, VAT கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் VAT கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரித்திருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு மற்றும் செலவுப் பதிவுகளை மாறி மாறிப் பதிவு செய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

## பகுதி B

### வினா இல. 02

இங்கு, தனியுடமை வியாபாரம் ஒன்றிற்காக வழங்கப்பட்ட பூரணமற்ற நிதித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சை மீதியைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் தொடர்பான சீராக்கங்கள் பற்றி சரியான புரிதலைக் கொண்டிருக்காததை அவதானிக்க முடிந்தது. மேலும், சில பரீட்சார்த்திகள் ஆரம்ப மூலதனத்தைச் சரியாக இனங்காணத் தவறியிருந்ததுடன் பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக நிதி நிலைக் கூற்றையும் வருமானக் கூற்றையும் தயாரித்திருந்தனர். வங்கிக் கடன் வட்டி சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

அத்துடன், சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியைத் தயாரிப்பதற்குப் பதிலாக பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

### வினா இல. 03

இங்கு பங்குடமைக் கணக்குகள் பற்றிய அடிப்படை அறிவு பரீட்சிக்கப்பட்டது. இவ்வினாவில் பங்காளர்களின் மூலதனக் கணக்கையும் நடைமுறைக் கணக்கையும் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகளிடையே பங்குடமைக் கணக்குகள் பற்றிய அறிவு குறைவாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகளின் பதிவுகள் பற்றிய தெளிவான விளக்கத்தை பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

- சில பரீட்சார்த்திகள் நன்மதிப்பு மற்றும் சொத்து மீள்மதிப்பீட்டு இலாபம் என்பவற்றை பங்காளர்களின் மூலதனக் கணக்கில் சீராக்கம் செய்வதற்குப் பதிலாக நடைமுறைக் கணக்கில் சீராக்கம் செய்திருந்தனர்.
- மிகச் சில பரீட்சார்த்திகள் மூலதனம் மீதான வட்டியை பங்காளர்களின் மூலதனக் கணக்கில் பதிவு செய்திருந்தனர்.
- மிகச் சில பரீட்சார்த்திகளால் மூலதனம் மீதான வட்டியானது புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பங்காளரான ''மீனா''வுக்கு கணிக்கப்படவில்லை.
- சில பரீட்சார்த்திகள் மீள்மதிப்பீட்டு இலாபத்தை புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பங்காளருக்கும்கூட சீராக்கம் செய்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இந்த வினா இலாப நோக்கற்ற அமைப்பொன்றுக்கான வருமானக் கூற்றைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு :

- சில பரீட்சார்த்திகள் கொள்வனவுகளுக்கு ஆரம்ப இருப்பைச் சேர்ப்பதற்கு பதிலாக இறுதி இருப்பைச் சேர்த்திருந்தனர்.
- கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பிழையான வரவு மற்றும் செலவுப் பதிவுகளைக் காணக்கூடியதாக இருந்தது. இதனால், கொள்வனவுகளின் சரியான தொகை காட்டப்பட்டிருக்கவில்லை.
- அங்கத்துவச் சந்தாக் கணக்கு சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் வரவு மற்றும் செலவுப் பதிவுகளும் முறையாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.
- கொள்ளல் மற்றும் கொடுத்தல் கணக்கில் காட்டப்பட்ட அங்கத்துவச் சந்தாக்கள் வருமான மற்றும் செலவினக் கணக்கில் ஆண்டிற்கான அங்கத்துவச் சந்தாக்களாக இனங்காணப்பட்டிருந்தன.
- சில பரீட்சார்த்திகள் வருமான மற்றும் செலவினக் கணக்கு, உணவுச்சாலை வியாபாரக் கணக்கு ஆகியவற்றுக்குப் பதிலாக நிதி நிலைக் கூற்றைத் தயாரித்திருந்தனர்.
- விளையாட்டு உபகரணக் கொள்வனவானது சில பரீட்சார்த்திகளால் வருமான மற்றும் செலவினக் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

**(A)** **(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் ரீசேட் ஒன்றிற்கான கிரயத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் கணித வழுக்கள் காரணமாக தவறான விடைகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் ரீசேட் கட்டளைக்கான இலாபத்தைக் கணிப்பிட்டிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் தவறான வெவ்வேறு விடைகளைக் கணிப்பிட்டிருந்தனர்.

**(B)** **(a)** சில பரீட்சார்த்திகள் மூலப் பொருள் இருப்பு கட்டுப்பாட்டுக் கணக்கினைச் சரியாகத் தயாரித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. இன்னம் சில பரீட்சார்த்திகள் ஊடுசெயல்களை கணக்கின் பிழையான பக்கத்தில் பதிவு செய்திருந்தனர்.

**(b)** சில பரீட்சார்த்திகள் புத்துருவாகும் வேலை கட்டுப்பாட்டுக் கணக்கை திருப்திகரமான மட்டத்தில் தயாரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட சில பதிவுகளைப் பிழையான பக்கத்தில் பதிவு செய்திருந்ததாலும் சில பதிவுகளை பதியாமல் விட்டிருந்ததாலும் WIP கட்டுப்பாட்டுக் கணக்கை சரியாகத் தயாரிக்கத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 06

இந்த வினா மேந்தலைகளின் ஒதுக்கீடு பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. **பகுதி (a)** ஆனது தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி மேந்தலை ஒதுக்கீட்டுக் கூற்றொன்றைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவின் **பகுதி (a)** இற்கு திருப்திகரமான மட்டத்தில் விடையளித்திருந்தனர். **பகுதி (b)** மற்றும் **பகுதி (c)** இற்கான விடைகள் திருப்திகரமானதாகக் காணப்படவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் தயாரிப்பு மற்றும் பொதியிடல் பிரிவுகளுக்கான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைச் சரியாகக் கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர். இதனால் திருட்டு எதிர்ப்பு சாதனமொன்றின் மொத்தக் கிரயத்தை மதிப்பிடுவதற்கு தவறான எண் பெறுமானங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

# <u>பகுதி C</u>

## வினா இல. 07

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பைப் பரீட்சித்திருந்ததுடன் இது (a), (b) என இரு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. பகுதி (a) ஆனது முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பையும் பகுதி (b) ஆனது நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பையும் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தாலும் மிகச் சில பரீட்சார்த்திகளே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன :**

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு:**

(1) வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைக் கூற்றிற்கென பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவங்களை சில பரீட்சார்த்திகள் பின்பற்றியிருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் தனிச்ச வட்டியைச் சரியாகக் கணிப்பிடவில்லை. வேறு சிலரால் செலுத்தப்பட்ட தனிச்ச வட்டியானது முற்றடக்க வருமானக் கூற்றுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

(3) அட்டுறுக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் என்பன சரியாகக் காட்டப்படவில்லை.

(4) சில பரீட்சார்த்திகளால் தேய்மானத்திற்கான ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் செய்கை வழிகளை இணைத்திருக்கவில்லை என்பதால், கணிப்பீடுகள் தவறாக அமையும்போது செய்கை வழிகளுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவர்களால் பெற இயலவில்லை.

(6) அதிகளவான பரீட்சார்த்திகள் இறுதித் தொக்கு சீராக்கத்தை சரியாக சீராக்கம் செய்திருக்கவில்லை.

(7) அதிகளவான பரீட்சார்த்திகள் மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபத்தைச் சரியாகக் கணிப்பிடாததுடன் தேவையான பதிவுகளை மோட்டார் வாகனக் கணக்கு, திரள் தேய்மானக் கணக்கு மற்றும் மோட்டார் வாகன விற்பனைக் கணக்கு ஆகியவற்றில் மேற்கொண்டிருக்கவில்லை.

(8) சில பரீட்சார்த்திகள் சில பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டியிருந்ததுடன் சில பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டாது நிஜப் பெறுமானங்களில் எழுதியிருந்தனர்.

(9) நிருவாகச் செலவினம் மற்றும் விநியோகச் செலவினங்களுக்கான விபரமான செய்கை வழிகளைச் சில பரீட்சார்த்திகள் காட்டியிருக்கவில்லை.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில் நிகர தேறத்தக்க பெறுமதியை (NRV) எடுத்திருக்கவில்லை.

(2) வருமதியாகவுள்ள காப்புறுதிக் கோரிக்கையை சில பரீட்சார்த்திகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டியிருக்கவில்லை.

(3) முன்செலுத்திய விளம்பரக் கட்டணங்கள், செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் மற்றும் அட்டுறுவான தனிச்ச வட்டி என்பன சில பரீட்சார்த்திகளால் நிதி நிலைக் கூற்றில் காட்டப்படவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டை வியாபார வருமதிகளிலிருந்து கழித்திருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

- - - -

**<u>பரீட்சையில் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்</u>:**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தை நன்றாகப் படித்து அதன் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(2) செயல் வினைச்சொற்களின் வரைவிலக்கணங்களைப் புரிந்துகொண்டு, வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்துப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

(3) கடந்தகால வினாத்தாள்களின் உள்ளடக்கத்தைப் படிப்பதுடன் ஆகக்குறைந்தது கடந்த 2 – 3 பரீட்சை வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதுடன் வினாக்கள் எந்த வழிமுறையில் அமைக்கப்படுகின்றன என்பதையும் புரிந்துகொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு முன்னராக நேர அடிப்படையில் கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்க்க வேண்டும். இது பரீட்சையில் நேர முகாமைத்துவத்தை மேம்படுத்தும்.

(5) பரீட்சார்த்திகள் பரீட்சையில் நேர்த்தியான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(6) பரீட்சார்த்திகள் வினாத்தாளிற்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்தல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொண்டு, பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்கும் பொருட்டு தமது மனதைத் தெளிவாகவும் சமநிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

(8) பரீட்சார்த்திகள் தரப்பட்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கான நேர ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும், இதனால் பரீட்சார்த்திகள் தரப்பட்ட சகல வினாக் களுக்கும் பயனுறுதிமிக்க வகையில் விடையளிக்க இயலுமாக இருக்கும்.

(9) தேவைப்படுத்தப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பொருத்தமாக இலக்கமிடப்பட்டுள்ளதா என்பதையும் விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர் இரு தடவைகள் சோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

- * * * -